**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 105/2021**

| | | | |
|---|---|---|---|
| | | **DEPOSITION OF WITNESS** | **PW.1** |
| NAME | புருசோத்தமன் | TALUK | குடியாத்தம் |
| FATHER NAME | பெருமாள் மேஸ்திரி | RELIGION | இந்து |
| AGE | 55 | OCCUPATION | |
| VILLAGE | மேட்டூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 13.10.2025.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

1. எனக்கும் கோவிந்தராஜிக்கும் எவ்வளவு இடத்திற்காக பிரச்சினை என்றால் 10 செண்ட்டுக்காக பிரச்சினை, அதற்காக தான் வழக்கு போட்டுள்ளேன். சர்வே எண்.156/1டி-ல் மேற்படி 10 செண்ட் இடம் உள்ளது. கிருஷ்ணன் இடத்திற்கு வடக்கு, கிழக்கு, லோகநாதன் நிலத்திற்கு மேற்கு, எங்கள் நால்வர் நிலத்திற்கு தெற்கு, இதன் மத்தியில் 10 செண்ட். மேற்படி சர்வே எண் மற்றும் செக்குபந்தி குறிப்பிட்டு தாவாவில் போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன்.

2. பிரதிவாதியின் தந்தை கிருஷ்ணன் மேஸ்திரியும், எனது அப்பா பெருமாளும் அண்ணன், தம்பிகள் என்றால் எனது அப்பாவிற்கு கிருஷ்ணன் மேஸ்திரி சித்தப்பா மகன். எனது அப்பா பெருமாளின் அப்பா பெயர் ராமானுஜீலு மேஸ்திரி. கிருஷ்ணன் மேஸ்திரியின் அப்பா பெயர் சின்னப்ப மேஸ்திரி. ராமானுஜீலு மேஸ்திரி, சின்னப்ப மேஸ்திரிக்கு என்ன உறவு என்றால் அண்ணன் தம்பி உறவு ஆனால் எப்படி என்று தெரியாது.

3. ராமானுஜீலு மேஸ்திரிக்கு உடன்பிறந்தவர்கள் பெயர் தெரியுமா என்றால் அவர் ஒருவர் மட்டும் தான் உடன்பிறந்தவர்கள் வேறு யாரும் இல்லை. ராமானுஜீலு மேஸ்திரிக்கு உடன்பிறந்தவர்கள் சின்னப்ப மேஸ்திரி மற்றும் முனியன் மேஸ்திரி என்றாலும் வழக்கிற்காக உடன்பிறந்தவர்கள் யாரும் இல்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து நான் சுயமாக வாங்கியதா அல்லது எனது மூதாதையர் சொத்தா என்றால் எனது தாத்தா வாங்கியது.

4. எனது தாத்தா ராமானுஜீலு வாங்கியதாக சொல்கிறேன் என்றால் சரிதான். எனது தாத்தா சொத்து வாங்கியதற்கு ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் ஆவணம் உள்ளதா என்றால் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை ஆவணம் உள்ளது. ஆவணம் இருந்திருந்தால் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் தாவா சொத்தானது ராமானுஜீலு மேஸ்திரிக்கும், சின்னப்ப மேஸ்திரிக்கும், முனிசாமி மேஸ்திரிக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான், முனிசாமி மேஸ்திரி தேவன் என்பவருக்கு விற்றுவிட்டார் தற்போது ராமானுஜீலு மேஸ்திரி குமாரர் பெருமாள் என்பவரின் குமாரர் ராஜேந்திரனுக்கும் சின்னப்ப மேஸ்திரி குமாரர் கிருஷ்ணன் என்பவருக்கு பாகம் மட்டும் உள்ளது. கிருஷ்ணன் மேஸ்திரியின் மகன் பிரதிவாதி கோவிந்தராஜ் என்றால் சரிதான்.

5. சர்வே எண்.156/1டி–க்கு என் பெயரில் தனிப்பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, 0.10 செண்ட் நிலத்தை அனுபவிக்க விடாததால் வாங்கவில்லை. 0.10 செண்ட் நிலத்தை நான் அனுபவிக்கிறேனா அல்லது கோவிந்தராஜ் அனுபவிக்கிறாரா என்றால் நான் தான் அனுபவிக்கிறேன். வழக்கிற்காக நான் அனுபவிப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. எனது நிலத்திற்கு செல்வதற்கும் பிரதிவாதி கோவிந்தராஜ் நிலத்திற்கு செல்வதற்கும் மூதாதையர் பயன்படுத்தி வந்த பொதுவழியை தான் பயன்படுத்த வேண்டும் என்றால் சரிதான். தாவாவில் 0.10 செண்ட் நிலத்தை மட்டும் பிரச்சினை செய்வதாக வழக்கு போடாமல் மொத்த நிலத்தையும் பொறுத்து பிரச்சினை செய்வதாக தாக்கல் செய்துள்ள தாவாவானது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சர்வே எண்.156/1டி–ல் மொத்த விஸ்தீரணம் 2.56 ஏக்கர். அதில் எங்களுக்கு எவ்வளவு நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் எங்களுக்கும் கிருஷ்ணன் மேஸ்திரிக்கும் தலா 1.28 ஏக்கர் ஒதுக்கப்பட்டது, பட்டா வாங்கும்போது அவர்கள் 10 செண்ட் அதிகமாக பதிவு செய்துகொண்டார்கள்.

7. 10 செண்ட் அதிகமாக பட்டா வழங்கப்பட்டதை மாற்றக்கோரி வட்டாட்சியரிடம் மனு ஏதாவது கொடுத்தேனா என்றால் ஏகபோகமாக நாங்களும், கிருஷ்ணன் மேஸ்திரி குடும்பத்தாரும் அனுபவித்து வந்ததால் மனு கொடுக்கவில்லை. ஏகபோகமாக அனுபவித்து வந்ததாக தாவாவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எங்களுக்கு கிருஷ்ணன் மேஸ்திரி மகனுக்கும் எப்போது பிரச்சினை ஏற்பட்டது என்றால் தேதி, மாதம் தெரியாது 2022ஆம் வருடம். அதுபோல் அவர் பிரச்சினை செய்யவில்லை என்றாலும் நாங்கள் தான் 0.10 செண்ட் நிலத்தை அபகரிக்க அவரிடம் பிரச்சினை செய்தோம் என்றால் சரியல்ல.

8. நாங்கள் பரிவர்த்தனை செய்த 0.10 செண்ட் நிலத்தை தான் அவர்கள் அனுபவிக்கிறார்கள் என்றாலும் அதை மறைத்து வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சர்வே எண்.156/1டி1–ன் பட்டா என்றால் சரிதான். மேற்படி பட்டா ஹெக்டேர் 0.52–க்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதாவது ஏக்கர் 1.28–க்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ஆவணம் சர்வே எண்.156/1டி2–க்கு வழங்கப்பட்ட பட்டா என்றால் அது சரியல்ல, மோசடியான ஆவணம். மேற்படி ஆவணத்தை நானே தாக்கல் செய்துவிட்டு மோசடியான ஆவணம் என சொல்கிறேன் என்றால் அந்த ஆவணத்தை பற்றி சரியான விவரம் எனக்கு தெரியவில்லை. சர்வே எண்.156/1டி ஆனது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் வழக்கிற்காக உட்பிரிவு செய்யவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை.

10. சர்வே எண்.156/1டி2–ல் உள்ள நிலமானது எங்களுக்கும் கிருஷ்ணன் மேஸ்திரிக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ஆவணத்தில் கிருஷ்ண மேஸ்திரி, பால்ராஜ், புருசோத்தமன், சிட்டிபாபு மற்றும் ராஜேந்திரனுக்கு பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள 10 செண்ட் நிலத்திற்கு தான் எனக்கும் பிரதிவாதிக்கும் பிரச்சினை என சொல்கிறேன் என்றால் சரிதான்.

11. நான் தாக்கல் செய்துள்ள ஆவணப்படிக்கு பிரதிவாதிக்கு உரிமை உள்ளது என்றாலும் அதனால் அவருக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. பிரச்சினை என்றால் பாகப்பிரிவினை வழக்கு தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சரிவர விவரங்கள் கோராததால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரமுடியாது என்றாலும் எனது தாவா மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் பொய்யான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.